




- வாழ்வோம்

ஆளுங்கட்சிக்குக் கடிவாளம்!

குதிரை பேரத்தின்மூலம் மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்குத் திணிக்கப்பட்ட இடைத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அ.தி.மு.க.வில் இருந்து விலகி ஆளுங்கட்சியில் இணைந்தவர்கள், இந்த இடைத்தேர்தலில் வெற்றிபெற்றிருந்தாலும், `அது, பரிதாபத்திற்குரிய வெற்றி' என சமூக வலைதளங்களில் பரவலான விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதிகார பலத்தைப் பயன்படுத்தி, மொத்த ஆளுங்கட்சியும் இரண்டு தொகுதிகளிலும் குவிக்கப்பட்டு, பரிசுப்பொருள்கள் வழங்கப்படுவதாகவும், டிபன் பாக்ஸில் வைத்து பணப்பட்டுவாடா செய்யப்படுவதாகவும் செய்திகள் வந்துகொண்டே இருந்தன. ஆனாலும், மிகச்சொற்ப வாக்கு வித்தியாசத்தில்தான் ஆளுங்கட்சியால் வெற்றிபெற முடிந்திருக்கிறது.

`5 நிமிடம் பேசினாலே கொத்து பரோட்டா' என எகத்தாளமாகப் பேசியவர், இந்த இரண்டு தொகுதிகளிலும் தெருத்தெருவாகச் சுற்றியும் தப்பிப்பிழைத்தது போன்ற வெற்றியைத்தான் பெற முடிந்திருக்கிறது. குறிப்பாக, நான்கே மாதங்களில் ஆளுங்கட்சியின் மீது மூன்றில் இருவர் அதிருப்தியில் இருக்கிறார்கள் என்பதை இம்முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான தி.மு.கழகம் தீவிரமான களப்பணியினால் மட்டுமே, மதுராந்தகத்தில் 30% வாக்குகளையும் தாராபுரத்தில் 32% வாக்குகளையும் பெற்றிருக்கிறது. கடும் மும்முனைப் போட்டியிலும் ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகங்களை மீறி, தி.மு.கழகம் பெற்றிருக்கிற வாக்குகள் திராவிட மாடலின் தேவையை உணர்த்தியிருக்கின்றன. தி.மு.கழகம் பெற்றிருக்கும் வாக்குகள், ஆளுங்கட்சியின் குதிரை பேர அரசியலுக்குப் பயம் கொடுத்திருக்கிறது எனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக,``தேர்தலில் தோற்றிருந்தாலும் அரசியலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் தி.மு.க. வேட்பாளர்கள். கட்சிதாவிகளுக்குப் பயம் காட்டியிருக்கிறார்கள். வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார், மார்க்சிய ஆய்வாளர் பேராசிரியர் அருணன்.

ஃப்ளாஷ்பேக்



தொண்டனிடத்திலும் தொகுதி நிலவரம்!

2003-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி, அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது எடுத்த படம். அப்போது, சாத்தான்குளம் பேரூர் கழகச் செயலாளராகவும் பேரூராட்சி மன்ற கவுன்சிலராகவும் இருந்தேன். அந்தச் சமயத்தில், சாத்தான்குளம் இடைத்தேர்தல் நடைபெற இருந்ததால், தலைவர் என்னிடம் 'தொகுதி நிலவரம் மற்றும் யாரை வேட்பாளராக அறிவிக்கலாம், அவருக்கு வெற்றி வாய்ப்பு என்ன? எனக் கேட்டார். நான் ஒருவரைக் கூறினேன். இன்னும் ஒருவரைக் கூறுமாறு தலைவர் சொன்னார். அதன்பிறகு, மற்றொருவர் பெயரைக் கூறினேன். நான் கூறியவற்றை அருகில் இருந்த, தற்போதைய கழகப் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களிடம் குறிப்பெடுத்துக்கொள்ளும்படி கூறினார். தலைவருக்கே களநிலவரம் எல்லாம் தெரியும் என்றாலும், பேரூர் செயலாளரான என்னிடமும் விசாரித்ததை என்னால் மறக்க முடியாது. என் வாழ்வின் மகிழ்ச்சியான தருணம் அது.



இ.ஸ்டான்லி

- இ.ஸ்டான்லி, பேரூராட்சி மன்ற கவுன்சிலர், மாவட்டப் பிரதிநிதி, சாத்தான்குளம், தூத்துக்குடி தெற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

காலத்தின் குரல்

வரலாற்றைப் பேசவேண்டிய காலம்!

தமிழ்நாட்டில், அண்மைக் காலத்தில் நடைபெற்றுவரும் சட்ட ஒழுங்குக்கு எதிரான குற்றங்களிலும், சமூக ஒழுங்குக்கு எதிரான வன்முறைகளிலும் பெருங்கொடுமைக்கு ஆளாகிறவர்கள் பெண்கள். வயது வேறுபாடில்லாத வகையில் முதியவர்கள், இளம்பெண்கள், சிறுமிகள், குழந்தைகள் எனப் பெண்கள் மீது நடத்தப்படும் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

தமிழ்நாட்டில் ஒரு 'எப்ஸ்டீன்' என்று ஒப்பிடும் அளவிற்கு, 'கிரானைட்' வீரமணி நடத்திய குழந்தைகள் மீதான கொடுமைகள் நம்மை அதிரவைத்துக் கொண்டிருக்கின்றன. இன்னும் வெளிவராத வலைப் பின்னல்களைப் பற்றிய அச்சமும் அதிகரிக்கிறது. இதைப்பற்றிய கவலையுடன் கட்சிகளைக் கடந்து ஒரு பொறுப்புள்ள சமூகமாக நாம் சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்தக் காலகட்டத்தில், கலையின் பெயரால் பெண்களைப் 'பொதுமகளிர்' ஆக்கிய ஒரு பழக்கத்தைப் போற்றி, அந்த முறை ஒழிந்து விட்டதே எனக் கவலைப்படுகிறவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? அப்படி ஒரு கருத்தரங்கம் சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கில் தேவதாசிகளாக மாற்றப்பட்ட பல பெண்களைக் காப்பாற்றி, அவர்களுக்காக ஓர் ஆதரவு இல்லத்தை உருவாக்கிய 'ஏமி கார்மைக்கேல்' என்ற ஒரு பெண்மணி வெளி நாட்டவர். அதிலும் கிறிஸ்தவர் என்பதால், அவரை இழித்தும் பழித்தும் பேசினார் ஜெயமோகன் என்ற ஒரு எழுத்தாளர். நாம் எதிர்பாராத சில துணைக்குரல்களும் அங்கே ஒலித்தன.

அய்யோ 'தேவதாசி முறை' ஒழிக்கப்பட்டு விட்டதே..! என்ற புலம்பல் எழுவது இது முதல் முறையல்ல. 'தேவதாசி முறை'யை ஒழிப்பதற்காகக் களப்போராளியாக நின்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு அவரது உறவினர்களே உணவில் நஞ்சைக் கலந்து கொடுத்தார்கள். மேடையில், அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே, மேடையில் ஏறி, அவரது தலைமுடியை வெட்டி அவமானப்படுத்தினார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், சட்டசபையில் 'தேவதாசி முறை' ஒழிப்பதற்கான மசோதாவைக் கொண்டுவந்தபோது, அதனை எதிர்த்து, தேவதாசிகள் சங்கத்தினர் கவர்னருக்கு மனு அனுப்பினார்கள். ஈரோடு நகர்மன்றத் தலைவராக இருந்த தந்தை பெரியார், கோயில்களில் தேவதாசிகளை நியமிக்கும் முறையை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தார் என்பதற்காக, தேவதாசிகள் அமைப்பின் சார்பாகக் கூட்டம் கூட்டி, அவரை எப்படி வசைபாடினார்கள் என்பதை தந்தை பெரியாரே எழுதியுள்ளார்.

ஆனால் 1949-ஆம் ஆண்டு, 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட பிறகு, தேவதாசிகள் என்று யாரும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவுமில்லை. அடுத்த தலைமுறை தேவதாசியைத் தயாரிக்க 5 வயது முதல், பெண்குழந்தைகளைக் கோயிலுக்கு அர்ப்பணிக்கும் கொடுமையும் இல்லை. ஆனால், 'தேவதாசிமுறை' ஒழிந்து விடக் கூடாது என்று சாஸ்திரத்தின் பெயரால் வரிந்துகட்டி நின்ற, தேசபக்தர் சத்தியமூர்த்தி அய்யரின் தத்துவ வாரிசுகள், அவ்வப்போது இந்த 'தேவதாசிமுறை'யைப் போற்றிப் பாடலைப் பாடுவது வழக்கம்தான்.

ஆனால், எப்போதாவது எழும் இத்தகைய தனிநபர் கருத்துகள், ஒருங்கிணைகின்ற ஒரு நிகழ்ச்சி சென்ற மாதம் சென்னையில் நடைபெற்றது. 'தேவதாசிமுறை' மீண்டும் வரவேண்டும் என்பது, அந்த நிகழ்ச்சியை முன்நின்று நடத்தியவர்களின் நோக்கமாக இல்லாமல், ஓர் ஆய்வரங்கமாக அதனை நடத்த வேண்டும் என்றுகூட நினைத்திருக்கலாம். ஆனால், அந்தச் சட்டம் ஏன் தேவைப்பட்டது என்பதை எடுத்துரைக்கவோ, அதனால் காப்பற்றப்பட்ட பெண்களைப் பற்றி எடுத்துக்கூறவோ ஒரு பிரதிநிதித்துவம் இல்லாத கருத்தரங்கம் என்பது ஒரு சார்பானதாகத்தான் இருக்கமுடியும்.



அக்கருத்தரங்கிலும்கூட, 'தேவதாசி முறை' பற்றிய சில விமர்சனக் கருத்துகளும் இடம் பெற்றன. ஆனால், கருத்தரங்கின் நட்சத்திரப் பேச்சாளர்களின் உரைகளோ, தேவதாசிகள் மன்னரையே திருமணம் செய்யும் உரிமை பெற்றிருந்தார்கள். அவர்கள் இறந்தால், கோயில் நடை சாத்தப்படும் மரியாதையைப் பெற்றிருந்தார்கள், கோயிலில் விளக்கேற்றவும் தரையை மெழுகவும் ஆன புனிதக் கடமைகள் அவர்களுக்கே உரியன, அவர்களுக்குத் தங்கள் உடலின்மீது அதிகாரம் இருந்தது போன்ற மிகைப்படுத்திய கதைகளையும்,பிரிட்டிஷ்காரர்கள்தான், அவர்கள் ஒழுக்கமற்றவர்கள் என்ற முத்திரையைக் குத்திவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டையும்தான் ஓங்கி ஒலித்தனர்.

சட்டத்தை உருவாக்கியவர்கள், அந்தப் பெண்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யாமல் விட்டுவிட்டார்கள் என்ற வருத்தம், உரையாற்றிய அனைவருக்கும் இருந்தது. ஆனால், அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய வரலாறு இன்னும் விரிவாக இருக்கிறது. டாக்டர். முத்துலட்சுமி அவர்கள் 1929-ஆம் ஆண்டு, முதன்முதலில் தேவதாசி முறைக்கு எதிரான மசோதாவைக் கொண்டுவந்த போது, அவர் முன்வைத்த ஏற்பாடு என்ன தெரியுமா?



வழக்கறிஞர் அ.அருள்மொழி ■

'தேவதாசிகளின் வாழ்வாதாரத்திற்காக அவர்களுக்குக் கோயில் நிலங்களைப் பட்டா போட்டுக் கொடுங்கள்' என்பதுதான். தேவதாசிகளைப் போற்றிப் புனிதப்படுத்திய கோயில், சாஸ்திர, சனாதனக் காப்பாளர்கள் அந்த மசோதாவை ஏன் எதிர்த்தார்கள்? இவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொடுத்த அந்தப் பெண்களுக்கு, அவர்கள் உண்மையிலேயே தங்கள் உடல் மீதான உரிமையுடன் மானத்தோடு வாழ ஒரு துண்டு நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுக்க சம்மதிக்காதவர்கள் யார்? அதனை எதிர்த்தவர்கள் யார் யார்? வளமும் வனப்பும் இருக்கும்வரை கோயிலின் பெயரால் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு சட்டம் வந்தவுடன், அவர்களைப் பிச்சையெடுக்க வைத்த புண்ணியம் யாருடைய கணக்கில் சேரும்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல அவர்களிடம் உண்மையுமில்லை, நேர்மையுமில்லை.

பெண்களின் உடலைக் கோயில் ஆச்சார்யர்கள், அர்ச்சகர்கள், ஸ்தானிகர்கள் ஆகியோர் எப்படி உரிமை கொண்டாடினார்கள் என்பதை 'காமிகாகமம்' எனும் ஆகம விதி விரிவாகப் பேசுகிறது. மேற்கூறியவர்களைத் தவிர, அவர்களது வாழ்க்கை வசதிகளுக்கான ஆதரவாளர்கள், அதிகாரம் பெற்றவர்கள், பெரும் தனவந்தர்கள் என ஒரு கூட்டமே அந்த 'தேவதாசி முறை'க்கு ஆதரவாக இருந்திருக்கிறது என்றால், அந்தப் பெண்களின் நிலை எப்படி இருந்திருக்கும்?. கிடைத்த ஆளைக்கொண்டு, தன் எதிர்காலத்துக்கு வேண்டிய சேமிப்பை அந்தப் பெண் எப்படி உருவாக்கிக் கொண்டாள்? அந்த தேவதாசிக்குக் கோயில் கொடுத்த இந்த வாழ்க்கை முறையால், தங்கள் சொத்தை இழந்து தெருவில் நின்ற குடும்பங்களின் கண்ணீர்க் கதைகள் எத்தனை?

இவற்றை மீண்டும் பேச நாமும் விரும்பவில்லை. ஆனால், கண்முன் நடந்த வரலாற்றைத் திரித்து, மீண்டும் ஒரு சீரழிவுப் பழக்கத்தை மரபின் பெயரால் புனிதப்படுத்தும்போது, அந்த இழிநிலையை ஒழித்தவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுவார்கள். அப்படித்தான் 'ஏமி கார்மைக்கேல்' அம்மையார் தொடங்கி, டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் வரை குற்றம் சாட்டப்படுகிறார்கள். அவர்களால் நேரடியாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரைக் குறை சொல்ல முடியவில்லை. ஏனெனில், ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் 'தேவதாசிகளுக்கு ஒரு எச்சரிக்கை' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை, 'குடிஅரசு' ஏட்டில் இருக்கிறது. அந்த சுயமரியாதை இயக்கம் எனும் நெருப்பு வளையம் இன்னும் தொடர்ந்து சுழன்று கொண்டுதான் இருக்கிறது.

அதனால்தான், தேவநாயகி என்ற பெயரில் கருத்தரங்கம் நடந்த, ஒரே வாரத்தில் அதற்கான மறுப்புக் கருத்தரங்கை, திராவிடர் கழக மகளிர் அணியும் திராவிட மகளிர் பாசறையும் இணைந்து 'போற்றத் தகுந்ததா தேவதாசி முறை?' என்ற தலைப்பில், சென்னை பெரியார் திடலில் நடத்தியது. உண்மை வரலாறும் திரிபு வாதங்களுக்கான பதிலடியும் அங்கு பதிவு செய்யப்பட்டன.

இன்று, 'தேவதாசி முறை' வேண்டும் என்று அந்த சமூகத்தைச் சேர்ந்த யாரும் பேசவில்லை. அவர்களை வைத்துத் தன் பிழைப்பை நடத்த விரும்பும் ஒரு கூட்டம் அன்றும் இருந்தது. அன்று கோயில் சாஸ்திரம், இன்று கலை, இலக்கியம் என புதுப்புது பூச்சுடன் வருகிறது. அவர்கள் உணர வேண்டியது ஒன்று உண்டு.

ஒரு பெண்குழந்தையின் வாழ்க்கையும் அவள் உடலின் மாண்பைக் காக்கும் உரிமையும் சாஸ்திரங்களைவிட, கலையை விட, இலக்கியத்தைவிட உயர்ந்தது. அந்தக் குழந்தையின் வாழ்க்கையை மதம் பிடித்தவர்களும் பணம் படைத்தவர்களும் 'கோயில்', 'கலை' என்ற பெயரில், சூறையாடாமல் தடுப்பதற்கு, எத்தனை இலட்சம் ஆண்டுகள் பழைமையான மரபாக இருந்தாலும், அது ஒழிக்கப்படத்தான் வேண்டும்.

'தேவதாசி முறை ஒழிப்பு' என்பது அன்றைக்கு தேவதாசிகளாக வாழ்ந்த பெண்களை ஒழிக்க வந்த சட்டமல்ல. அவர்களைத் தொடர்ந்து அந்தக் கொடுமைக்கு ஆளாகவிருந்த ஆயிரக்கணக்கான பெண்குழந்தைகளைக் காப்பாற்றிய சட்டம். இதனை, மனிதாபிமானம் உள்ளவர்கள் மறவாமல் இருக்கவும், அந்தச் சட்டத்தை இன்று விமர்சிப்பவர்களை, அடையாளம் காணவும் நாம் வரலாற்றைப் பேச வேண்டிய காலம் இது. ■

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900